விளம்பர எண். 256

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**
**தேர்வாணைய அறிவிக்கை/விளம்பரம் எண்.248, நாள் 21.07.2010-இன்**
**தொடர் அறிவிக்கை / விளம்பரம்**

**தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

-----

'தி இந்து' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளிதழ்களில் 21.07.2010 அன்று வெளியிடப்பட்ட தேர்வாணைய அறிவிக்கை/விளம்பரம் எண்.248-ல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அடங்கிய 2653 காலிப் பணியிடங்களுக்கு (1077 ப.வ./ப.ப. க்கான குறைவுப் பணியிடங்கள் உட்பட) கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நேரடி நியமனத்திற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

அவ்வறிவிக்கை/விளம்பரத்தின் தொடர்ச்சியாக கூடுதல் காலிப்பணியிடங்களுக்கும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 28.12.2010 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகிறது.

| பதவியின் பெயர் மற்றும் சம்பள விகிதம் | பணி மற்றும் பணிக்குறியீட்டு எண். | பதவிக் குறியீட்டு எண். | காலியிடங்களின் விவரம் | |
|---|---|---|---|---|
| கிராம நிர்வாக அலுவலர் (ரூ.5,200-20,200+ தரஊதியம் ரூ.2000/- (ச.ப.1) (மாதம் ஒன்றுக்கு) | தமிழ்நாடு அமைச்சுப் பணி (050) | 2025 | முன்னர் அறிவிக்கப் பட்டவை | 2653 (ப.வ./ப.ப. க்கான 1077 குறைவுப் பணியிடங்கள் உட்பட) |
| | | | தற்போது அறிவிக்கப் பட்டுள்ளவை | 831 |
| | | | மொத்தம் | 3484 (ப.வ./ப.ப. க்கான 1077 குறைவுப் பணியிடங்கள் உட்பட) |

**எழுத்து தேர்வுக்கான தேதி:**

இப்பதவிக்கான எழுத்துத்தேர்வு 27.02.2011 மு.ப (காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை) அன்று நடைபெறும்.

திருத்தப்பட்ட மாவட்ட வாரியான காலிப்பணியிடங்களின் பகிர்வு குறித்த விவரங்கள் யாவும் தேர்வாணைய வலைதளத்தில் பின்னர் வெளியிடப்படும்.

'தி இந்து', 'தினத்தந்தி' மற்றும் தேர்வாணையத்தின் வலைதள முகவரி www.tnpsc.gov.in லும் வெளியிடப்பட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கை/விளம்பரம் எண்.248, நாள் 21.07.2010ல் உள்ள அனைத்து விவரங்கள், முக்கிய தேதிகள் மற்றும் வரையறைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள தொடர் அறிவிக்கை/ விளம்பரத்தைத் தொடர்ந்து புதிதாக இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் அது பொருந்தும். ஏற்கனவே தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கை/விளம்பர எண்.248 நாள் 21.07.2010-ன்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அடங்கிய கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நேரடி நியமனத்திற்கு 20.08.2010 அன்றோ அதற்கு முன்பாகவோ விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரர்கள் இத்தொடர் அறிவிக்கை (Supplementary Notification) / விளம்பரத்தின்படி மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

அறிவிக்கை விளம்பர எண் 248 நாள் 21.07.2010ன்படி விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாளான 20.08.2010க்கு பிறகு தேர்வாணையத்தால் பெறப்பட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இத்தொடர் அறிவிக்கையின்படி மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்", தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.1 கீரிம்ஸ் சாலை, சென்னை 600 006 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாளான 28.12.2010 அன்று மாலை 5.45 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்பாகவோ தேர்வாணைய அலுவலகத்தால் பெறப்படும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வலைதள சேவை மூலம் விண்ணப்பிக்கும் வசதி 26.12.2010 அன்று மாலை 5.45 க்கு நிறுத்தப்படும்.

நாள். 16.12.2010 செயலாளர்.